| <u>மாநகர் மன்ற கூட்டம் நடைபெற்ற நாள்</u> 30.12.2024ம் | <u>டிசம்பர் மாதம் சாதாரணக் கூட்ட சிறப்பு தீர்மானங்கள்</u><br>வரிசை எண் | மாமன்ற தீர்மான எண் |
|---|---|---|
| | சிறப்பு தீர்மானங்கள்மாண்புமிகு திரு.சு.கல்யாணசுந்தரம் மாநிலங்களவை உறுப்பினர் அவர்களால் பரிந்துரைக்கப்பட்டு, வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் கொண்டுவரப்படும் சிறப்புத் தீர்மானங்கள் கீழ்கண்டவாறு<br>திராவிட மாடல் அரசு செயல்படுத்தி வரும் மக்கள் நலன் காக்கும் முத்தானதிட்டங்களால் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதன்மை மாநிலமாக மிளிர்கிறது. அரசு செயல்படுத்தி வரும் கலைஞர் மகளிர் உரிமைத்திட்டம், காலை உணவுதிட்டம் மூலம் குழந்தைகளுக்கு காலையிலும் சத்தான உணவு, புதுமைப் பெண் திட்டம், அரசு பள்ளியில் பயின்ற மாணவியர் தடையின்று உயர்கல்வி பயிலவேண்டும் என்ற நோக்கத்தோடு மாதம் 1000 ரூபாய் வழங்கும் ஊக்கத்தொகையின் மூலம் கிராமப்புறகுடும்பங்கள் பொருளாதார சுமை அகற்றப்பட்டு மாணவிகள் கல்வி பயின்றதை தொடர்ந்து மாணவர்களுக்கும் தமிழ் புதல்வன் திட்டம் தொடங்கப்பட்டது. முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாடுகள் திட்டம் மூலம் ஊராட்சி ஒன்றிய மற்றும் கிராம ஊராட்சி சாலைகள் மேம்படுத்துதல், வலுப்படுத்துதல், பராமரித்தல் முதலியவை கிராம சாலை மேம்பாட்டுத்திட்டத்தின் நோக்கமாகும். இதனால் கிராமங்கள் வளமடைந்து கிராமபுற மக்கள் பயனடைகிறார்கள். இதுபோல் முதலமைச்சர் ஆழ்ந்த சிந்தனையுடன் அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம், ஆதிதிராவிடர், இளைஞர்கள், மகளிர் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் புரட்சி திட்டங்களாகும். சாலை விபத்தினால் ஏற்படும் உயிரிழப்புகளை குறைத்திடும் வகையில் இன்னுயிர் காப்போம், நம்மை காக்கும் 48 திட்டம், அதுபோல் நமது ஒன்றியத்திலிருந்து சென்னை போன்ற பெருநகரங்களில் பணிபுரியும் பெண்கள் பாதுகாப்பிற்காக தோழிகள் விடுதி, சமூக நலத்துறையின் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மக்களை தேடி முதல்வர் முகாம் மூலம் பெறப்படும் மனுக்களுக்கு உடனடி தீர்வு போன்ற பல பயனுள்ள திட்டங்களை வழங்கிய நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு பாராட்டுகளையும், நன்றிகளையும் தெரிவித்துக்கொள்வதோடு தொடர்ந்து நல்லாட்சி நடைபெறுவதற்கு பல திட்டங்களை வழங்கிட இக்கூட்டத்தின் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறோம்.<br><br>**பொருள் – 1**<br>கும்பகோணம் மாநகராட்சி தற்போது இயங்கி வரும் புதிய பேருந்து நிலையம் மாநகராட்சியின் மையப்பகுதி இருப்பதால் போக்குவரத்து நெருக்கடி அதிகமாக இருப்பதாலும், மகாமகம் 2028 நடைபெற உள்ளதை முன்னிட்டுபுதியதாக பேரூந்து நிலையம் புறவழிச்சாலையில் நிரந்தரமாக அமைக்க தமிழக அரசை கேட்டுக்கொள்வது. | 241<br>வார்டு எண்.23<br>மாமன்ற உறப்பினர்<br>திருமதி.ச.பிரதீபா<br>அவர்கள் பொருள்<br>எண்.1 தொடர்பாக<br>தற்போது புறநகர்<br>பகுதியில் பேருந்து<br>நிலையம்<br>அமைக்கப்பட<br>தேவையில்லை என<br>பதிவு செய்து<br>இப்பொருள்<br>விவாதத்திலிருந்து<br>மட்டும் வெளிநடப்பு<br>செய்தார்.<br><u>அனுமதிக்கப்பட்டது.</u> |
| | **பொருள் – 2**<br>கும்பகோணம் மாநகராட்சி எல்லையில் பொதுப்பணித்துறைக்கு சொந்தமான வாய்க்கால் தற்போதுநீர் வரத்து ஏதும் இல்லாத காரணத்தினால் பொதுமக்களால் குப்பைகள் மற்றும் இதர பொருட்கள் வாய்க்காலில் போடுவதாலும், மேற்படி பொதுப்பணித்துறைக்குசொந்தமான வாய்க்காலை கும்பகோணம் மாநகராட்சி மூலம் பராமரிப்பு செய்ய அனுமதி வழங்கி அரசாணை எண்.97 பொதுப்பணி (க்யூ–2) துறை, நாள்.29.10.2015 வெளியிடப்பட்டுள்ளது. தற்சமயம் பெசன்ட்சாலையிலிருந்து பிரியும் காசிராமன் தெரு குறுகிய சாலையா இருந்ததால் கும்பகோணம் பரஸ்பர ஸகாய நிதி லிமிடெட் மூலம் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் சாலையை | 242<br>அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr><td></td><td>அகலப்படுத்தி உள்ளூர் வாய்க்காலில் இருபுறமும் RCC சிலாப்பால் மூடப்பட்டு அமைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த உள்ளூர் வாய்க்காலி வரும் மழை நீரை பூமிக்கு அடியில் செல்ல Recharge Fit போர் மூலம் செய்யப்பட்டு தற்சமயம் பயன்பாட்டில் உள்ளது. அதனால் கும்பகோணம் மாநகராட்சி எல்லையில் உள்ள பொதுப்பணித்துறைக்கு சொந்தமான வாய்க்காலில் நீர் வரத்து இல்லாத காரணத்தினால் நில அளவீடு செய்து மழைநீர் வடிய ஏதுவாக வாய்க்கால் இருபுறமும் கான்கிரிட் சுவர் அமைத்து மேல்புறம் RCC சிலாப் மூலம் மூடி தேவையான 30 மீட்டர் இடைவெளியில் Manhole அமைத்து தர தமிழக அரசை கேட்டுக்கொள்ளுதல்</td><td></td></tr>
<tr><td></td><td>பொருள் – 3<br>கும்பகோணம் மாநகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள் கீழ்கண்ட குடியிருப்புகளில் வசித்து வரும் 316 குடும்பங்களின் வீடு தற்போது மிகவும் மோசமான நிலையில் இருப்பதால் அதனை இடித்துவிட்டு புதியதாக கட்டித்தர தமிழக அரசை கேட்டுக்கொள்ளுதல்.<br>
<table>
<tr><th>வ. எண்</th><th>குடியிருப்பு இருக்கும் இடம்</th><th>தூய்மை பணியாளர்களின் எண்ணிக்கை</th></tr>
<tr><td>1</td><td>ஏ.ஆர்.ஆர்.காலணி</td><td>112</td></tr>
<tr><td>2</td><td>கக்கன் காலனி</td><td>56</td></tr>
<tr><td>3</td><td>நாகேஸ்வரன் தெற்கு குடிசை மாற்று வாரிய குடியிருப்பு</td><td>65</td></tr>
<tr><td>4</td><td>வேளாகுடி குடியிருப்பு</td><td>68</td></tr>
<tr><td>5</td><td>செம்போடை</td><td>15</td></tr>
<tr><td></td><td>மொத்தம்</td><td>316</td></tr>
</table></td><td>243<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>பொருள் – 4<br>கும்பகோணம் மாநகராட்சி மற்றும் டெல்டா மாவட்டங்களில் ரயில்வே துறைக்கு சொந்தமான உபயோகம் இல்லாத இடங்களை அந்தந்த பகுதிகளுக்கு ஏதுவாக வாடகை நிர்ணயம் செய்தும் குறிப்பாக டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டிணம் மற்றும் மயிலாடுதுறை போன்ற ரயில் தடங்கள் உள்ள பகுதிகளில் உபயோகம் இல்லாத இடங்களை சேமிப்பு இடங்கள் கட்டி தரும் பட்சத்தில் விவசாயிகள் வாழ்வாதாரமான விலைபொருட்களை சேமித்து வைக்கவும் சேமித்து வைக்கப்பட்ட விவசாயபொருட்களை ரயில்வே சரக்கு பெட்டிகள் மூலம் எடுத்துச் சென்றால் அரசுக்கு வருவாயும் விவசாயிகளுக்கு குறைந்த வாடகையில் சேவையும் கிடைக்கும் என்பதை கருத்தில் கொண்டு மேற்கண்ட இடங்களில் தானிய சேமிப்பு கிடங்கு கட்டிடம்கட்ட அனுமதியும் மற்றும் ரயில்வே துறை கட்டிடம் அமைத்து தர இந்திய ரயில்வே துறைஅமைச்சர் அவர்களையும் மற்றும் ரயில்வேத்துறைதலைவர் அவர்களை கேட்டுக்கொள்ளுதல்.</td><td>244<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>பொருள் – 5<br>கும்பகோணம் மாநகராட்சி வழியாக திருச்சி – விழுப்புரம் மெயின் ரயில்வே தடம் ஒரு வழியாக இருந்து வருகிறது. வருகிற 2028 மகாமகம் பெருவிழா நடைபெற இருப்பதால் தஞ்சாவூர் மாவட்டத்தில் உற்பத்தி செய்யும் உலோக பாத்திரங்கள் நெல் மற்றும் காய்கறிகள் எடுத்துச்செல்ல ஏதுவாக கும்பகோணம் – விழுப்புரம் ரயில்வே மெயின் தடத்தை இருவழித்தடமாக மாற்றித்தர மாண்புமிகு ரயில்வேத்துறை அமைச்சர் மற்றும் ரயில்வே போர்டு தலைவர் அவர்களையும் கேட்டுக்கொள்ளுதல்.</td><td>245<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | **பொருள் – 6**<br>கும்பகோணம் மாநகராட்சி வழியாக திருச்சி – விழுப்புரம் மெயின் ரயில்வே தடம் ஒரு வழியாக இருந்து வருகிறது. வருகிற 2028 மகாமகம் பெருவிழா நடைபெற இருப்பதால் தஞ்சாவூர் மாவட்டத்தில் உற்பத்தி செய்யும் உலோக பாத்திரங்கள் நெல் மற்றும் காய்கறிகள் எடுத்துச்செல்ல ஏதுவாக கும்பகோணம் – விழுப்புரம் ரயில்வே மெயின் தடத்தை இருவழித்தடமாக மாற்றித்தர தேவையான இடத்தை கையப்படுத்தி தரவும், ரயில்வே இடத்தில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள இடங்களை அகற்றித்தரவும் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களை கேட்டுக்கொள்ளுதல். | 246<br>அனுமதிக்கப்பட்டது |
| | **பொருள் – 7**<br>கும்பகோணம் மாநகராட்சி மக்கள் தொகை பெருக்கம் மற்றும் வருகிற 2028–ல் மகாமகம் பெருவிழா கருத்தில்வைத்துக்கொண்டு கும்பகோணம் ரயில்வே நிலையத்தில் தற்போது இயங்கி வரும் குட்ஷெட் அமைந்துள்ளதால் இங்கு வரும் லாரிகளால் சாலை முழுவதையும் ஆக்கிரமித்துபோக்குவரத்துக்கு இடையூறாக இருப்பதாலும், கும்பகோணம் தாலுக்கா, திருநாகேஸ்வரம் ரயில்வே நிலையத்தின் அருகில் ரயில்வே துறைக்கு சொந்தமான 15 ஏக்கர் நிலம் உள்ளதாலும், கும்பகோணம் ரயில்வே நிலையத்தை மக்கள் நலனுக்காக விரிவாக்கம் செய்ய ஏதுவாக கும்பகோணம் ரயில்வே நிலையத்தில் அமைந்துள்ள குட்ஷெட்டை திருநாகேஸ்வரம் ரயில் நிலையத்திற்குமாற்ற அனுமதி வழங்க மாண்புமிகு ரயில்வேத்துறை அமைச்சர் மற்றும் ரயில்வே போர்டு தலைவர் அவர்களையும் கேட்டுக்கொள்ளுதல். | 247<br>அனுமதிக்கப்பட்டது |
| | **பொருள் – 8**<br>கும்பகோணம் மற்றும் தாராசுரம் போன்ற ரயில் நிலையங்களில் இருந்து வரும் ரயில்வே குடியிருப்புகள் மிகவும் மோசமாக உள்ளதால் இடித்துவிட்டு புதிய ரயில்வே பணியாளர்களுக்கு குடியிருப்புகள் கட்டித்தர மாண்புமிகு ரயில்வேத்துறைஅமைச்சர் மற்றும் ரயில்வே போர்டு தலைவர் அவர்களையும் கேட்டுக்கொள்ளுதல். | 248<br>அனுமதிக்கப்பட்டது |
| | **பொருள் – 9**<br>தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை மாகமகம் என்ற பெருமவிழா (தென்னக கும்பமேளா) நடைபெற்று வருகிறது. வருகிற 2028–ஆம் ஆண்டு மகாமகம் திருவிழா நடைபெறுவதை முன்னிட்டும் மற்றும் கும்பகோணம் சுற்றி நவகிரக கோயில்கள் அமைந்துள்ளதால் அரியலூரில் இருந்து கும்பகோணம் வழியாக புதிதாக ரயில்வே தடம் அமைத்து புதிய ரயில் வண்டிகள் விட்டு கோயில் நகரமாம் கும்பகோணம்வழியாக நாகை துறைமுகம் வரை புதிய ரயில் பாதை அமைத்தால் நாகை துறைமுகத்தில் இருந்து எண்ணூருக்குசெல்லும் நிலக்கரி வண்டிகள் நேராக அரியலூரை அடைந்து எண்ணூர்குறுகிய நேரத்தில் சென்றுவிடலாம். கும்பகோணம் புண்ணிய ஸ்தலத்திற்கு எளிதாக சென்று வர அரியலூர்– கும்பகோணம் புதிய ரயில் பாதை அமைக்கவும், புதிய ரயில் விடவும் இந்திய ரயில்வே துறை அமைச்சர் அவர்களையும் மற்றும் ரயில்வேத்துறை தலைவர் அவர்களையும் கேட்டுக்கொள்ளுதல். | 249<br>அனுமதிக்கப்பட்டது |
| | **பொருள் – 10**<br>தஞ்சாவூர் மாவட்டம் சென்னை சாலையில் உள்ள மாண்புமிகு நீதிபதிகள் குடியிருந்த மாவட்ட நீதிபதிகளின் குடியிருப்பு கட்டிடத்திற்கு பதிலாக கோர்ட் சாலையில் மாண்புமிகு நீதிபதிகளுக்கு புதியதாக குடியிருப்பு கட்டி கொடுக்கப்பட்டு குடியிருந்து வருகிறார்கள். பழைய மாவட்ட நீதிபதிகள் குடியிருப்பு கட்டிடம் நீண்ட நாட்கள் ஆகியதால் குடியிருப்புகள் முற்றிலும் பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதாலும், மேலும் இதில் அதிக சமூக விரோத செயல்கள் நடைபெறுவதாலும் மழைக்காலம் என்பதால் | 250<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | எப்போதும் வேண்டுமானாலும் விழக்கூடிய நிலையில் உள்ளது. அகையால் மேற்கண்ட சென்னை சாலையில் உள்ள பழைய நீதிபதிகள் குடியிருப்பு இடித்து அப்புறப்படுத்த செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை (கட்டிடம்) தஞ்சாவூர் அவர்களை கேட்டுக்கொள்ளுதல். | |
| | **பொருள் – 11**<br>தஞ்சை மாவட்டம் கும்பகோணம் மாநகராட்சியில் செயல்பட்டு வரும் துணை கண்காணிப்பாளர் அலுவலகம் கீழ்கண்ட காவல் நிலையம் இணைக்கப்பட்டுள்ளது.<br>1. கும்பகோணம் கிழக்கு காவல் நிலையம்<br>2. கும்பகோணம் மேற்குகாவல் நிலையம்<br>3. தாலுக்கா காவல் நிலையம்<br>4. போக்குவரத்து காவல் நிலையம்<br>5. பட்டீஸ்வரம் காவல் நிலையம்<br>6. சுவாமிமலை காவல் நிலையம்.<br>கும்பகோணம் நகராட்சியை தற்போது மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு மக்கள் தொகை அதிகரித்ததால் குடியிருப்புகள் வியாபாரஸ் தலங்கள் பள்ளி கல்லூரிகள் அதிகம் உள்ளதாலும் அதுபோல் ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் மாநகரப் பகுதிகளில் ஒட்டிவருவதால் மாநகராட்சி பகுதியில் மக்கள் அருகாமையில் உள்ள ஊராட்சி பகுதிகளில் அதிகமாக குடியிருப்புகள் வரப்பெற்று மக்கள் குடியேறியதாலும், மாநகராட்சியில் அருகாமையில் உள்ள ஊராட்சிகளில் அதிகமக்கள் தொகை உள்ளதால் மாநகராட்சி மற்றும் ஊராட்சி பகுதியில் குற்றசெயல் அதிகமாக நடைபெறாமல் தடுக்கவும், பொதுமக்களுக்கு அமைதியான பாதுகாப்பான சூழ்நிலை ஏற்படுத்தவும் ஊராகப் பகுதிகளுக்கு ஒரு புறகாவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகமும் மாநகராட்சிக்கு ஒரு மாநகரகாவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகம் அமைக்க தமிழக அரசை கேட்டுக்கொள்ளுதல். | 251<br>அனுமதிக்கப்பட்டது |
| | **பொருள் – 12**<br>கும்பகோணம் மாநகராட்சி வீட்டு வசதிவாரியம் மூர்த்திசாலையில் உள்ள வீட்டுவசதிவாரிய பழையகுடியிருப்பு காலிசெய்யப்பட்டு கட்டிடம் சிதலம் அடைந்துகாணப்படுவதால் அதில் சமூகவிரோத செயல்கள் நடைபெறுவதை தடுக்கவும், விபத்துகளும் உயிர்சேதமும் ஏற்படும்வாய்ப்பு உள்ளதால் உடனடியாக கட்டிடத்தைஅகற்றிட செயற்பொறியாளர் தமிழ்நாடுவீட்டுவசதிவாரியம் தஞ்சாவூர் அவர்களை கேட்டுக்கொள்ளுதல். | 252<br>அனுமதிக்கப்பட்டது |
| | **பொருள் – 13**<br>கும்பகோணம்மாநகராட்சி தரம் உயர்த்தப்பட்டதாலும் சென்னை பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்துத்துறைஇயக்குநர் அவர்களின் செயல்முறைகள் கடிதம் R.No.4695774/Plan-1/S1/2023.Dated.21.09.2023 of the Director of Public Health and Preventive Medicine, Chennai-6 துணை இயக்குநர் சுகாதார பணிகள் அலுவலகம் ஏற்படுத்த ஆணையிடப்பட்டுள்ளது. மேற்படி அலுவலகத்திற்கு துணை இயக்குநர் மற்றும் இதர பதவிகள் உருவாக்க, தமிழக அரசை கேட்டுக்கொள்ளுதல். | 253<br>அனுமதிக்கப்பட்டது |
| | **பொருள் – 14**<br>கும்பகோணம் மாநகராட்சி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை அருகில் அமைந்துள்ள காவிரி ஆற்றின் புதிய நீர் ஒழுங்கி அமைத்து புதிய சாலை கல்லணை-பூம்புகார் சாலையை இணைக்கிறது. இரவு நேரத்தில் சில சமூக விரோதிகள் சிலரால் வன்முறைகள், குற்ற செயல்களில் ஈடுபடுவதால் காவல்துறை கண்காணிப்பு கேமிராஅமைக்க காவல்துறை கண்காணிப்பாளர் தஞ்சாவூர் அவர்களை கேட்டுக்கொள்ளுதல். | 254<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **பொருள் – 15**<br>கும்பகோணம் மாநகராட்சி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை அருகில் அமைந்துள்ள காவிரி ஆற்றின் புதிய நீர் ஒழுங்கி அமைத்து புதிய சாலை கல்லணை–பூம்புகார் சாலையை இணைக்கிறது. இரவு நேரத்தில் சில சமூக விரோதிகள் சிலரால் வன்முறைகள், குற்ற செயல்களில் ஈடுபடுவதால்சாலைவிளக்குகள் (Light) மாநகராட்சி மூலம் அமைக்க மன்றம் தீர்மானிக்க. | 255<br>அனுமதிக்கப்பட்டது |
| | **பொருள் – 16**<br>சென்னை உயர்நீதிமன்றம் வழக்கு எண்.W.P.31720/2015 Contempt Petition 556/2024, நாள்.02.08.2024 வழங்கப்பட்ட தீர்ப்பின்படி கும்பகோணம் மாநகராட்சியில் நீர்நிலை புறம்போக்கில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு குடியிருந்த சுமார் 500 வீடுகள் இடிக்கப்பட்டு கும்பகோணம் தாலுக்கா, சேஷம்பாடி கிராமத்தில் விலையில்லா மனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பாதிக்கப்பட்ட குடியிருப்பினருக்கு இடம் மட்டும் வழங்கப்பட்டு வீடு இல்லாத காரணத்தினால் சேஷம்பாடிஊராட்சியில் வழங்கப்பட்ட மனைப்பட்டா இடத்திற்கு செல்லாமல் உள்ளார்கள். எனவே மேற்படி இடத்தில் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் வீடு கட்டித்தர தமிழக அரசை கேட்டுக்கொள்ளுதல். | 256<br>அனுமதிக்கப்பட்டது |
| | **பொருள் – 17**<br>தமிழ்நாடு மின்சார வாரியம் செயற்பொறியாளர் இயக்குதலும் மற்றும் பராமரித்தல் கும்பகோணம் வடக்கு மற்றும் தெற்கு இரு கோட்டம் அமைந்துள்ளது. மேற்படி கோட்டத்தில் கும்பகோணம் மாநகராட்சி, திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியம், கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம் மற்றும் திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியங்கள் அடைங்கியது. தற்போது கும்பகோணம் மாநகராட்சி தரம் உயர்த்தப்பட்டு மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டதால் தனியாக கும்பகோணம் மாநகராட்சி மட்டும் செயற்பொறியாளர் இயக்குதலும் மற்றும் பராமரித்தல் அலுவலகம் அமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களை கேட்டுக்கொள்ளுதல். | 257<br>அனுமதிக்கப்பட்டது |
| | **பொருள் – 18**<br>தமிழ்நாடு மின்சார வாரியம் செயற்பொறியாளர் இயக்குதலும் மற்றும் பராமரித்தல் கும்பகோணம் வடக்கு மற்றும் தெற்கு இரு கோட்டம் அமைந்துள்ளது. மேற்படி கோட்டத்தில் கும்பகோணம் மாநகராட்சி, திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியம், கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம் மற்றும் திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியங்கள் அடைங்கியது. கண்காணிப்பு பொறியாளர் இயக்குதல் மற்றும் பராமரித்தல் கும்பகோணம் புதிய அலுவலகம் தோற்றுவிக்க மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களை கேட்டுக்கொள்ளுதல். | 258<br>அனுமதிக்கப்பட்டது |
| | **பொருள் – 19**<br>கும்பகோணம் மாநகராட்சி எல்லையில் 60 ஆண்டுகளாக கும்பகோணம் ரயில் நிலையம் வளாகத்தில் இயங்கி வந்த Railway Mail Service (RMS) & Railway Postal Department கும்பகோணம், திருவிடைமருதூர், பாபநாசம் மற்றும் நன்னிலம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கிராமங்கள் கும்பகோணம் உள் மற்றும் சுற்றியுள்ள 30 கி.மீ சேர்ந்த பொதுமக்கள் பயனடைந்து வருகிறார்கள். இந்த RMS (பணி நேரம் மாலை 6.00 முதல் காலை 4.00 மணி வரை) மூலம் பதிவுத் தபால், விரைவு தபால், பார்சல் தினந்தோறும் அனுப்பப்பட்டு வருகிறது. மேலும் ஆதார் அப்டேசன் சென்டர் செயல்பட்டு வந்தது. தற்சமயம் கும்பகோணம் ரயில் நிலையம் வளாகத்தில் இயங்கி வந்த ரயில்வே மெயில் சர்வீஸை தஞ்சாவூர் ரயில் நிலையத்தில் இயங்கி வரும் | 259<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | RMS – உடன் இணைக்கப்பட உள்ளது.<br>பொதுமக்கள் நலன் கருதியும், பதிவுத்தபால் மற்றும் அலுவலகம் முடிந்தபின் இரவு நேரத்தில் அனுப்ப பயன்பட்டு வந்த கும்பகோணம் ரயில் நிலைய வளாகத்தில் இயங்கி வந்த RMS தொடர்ந்து கும்பகோணம் ரயில் நிலையத்திலேயே செயல்பட அஞ்சலகதுறை தலைவர் சென்னை அவர்களை கேட்டுக்கொள்ளுதல். | |
| | **பொருள் – 20**<br>தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் மாநகரத்தில் உள்ள மாத்தி ரயில்வே கேட்டில் தினந்தோறும் புகைவண்டி வரும் நேரத்தில் ரயில்வே கேட் அடைக்கப்படும் 10 நிமிடத்தில் இருபுறமும் 1 கி.மீ தூரத்திற்கு மேல் போக்குவரத்து வாகனங்கள் நிற்பதால் அவ்வழியே செல்லும் பலரும் பாதிக்கப்படுகின்றனர். கும்பகோணம் மாநகராட்சியின் எல்லையின் தெற்கு நுழைவுவாயில் அமைந்துள்ள கும்பகோணம் மாநகராட்சி மருதாநல்லூர் சாலையில் மாத்தி ரயில்வே கேட்வழியாக 10 ஊராட்சிகளில் வசிக்கும் பள்ளி மற்று கல்லூரி படிக்கும் மாணவிகள் அரசு மற்றும் வணிக நிறுவனங்களில் பணிபுரிவோர், வியாபாரத்திற்கு வந்து செல்லும் விவசாயிகள், இதன் வழியாக சென்று வருகின்றனர். மேலும் 2028–ஆம் ஆண்டில் நடைபெறும் மகாமகப் பெருவிழாவை முன்னிட்டும்மற்றும் கும்பகோணம் மாநகரத்தின் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கவும், பள்ளி கல்லூரி மாணவர்கள் சிரமத்தை தவிர்க்கும்பொருட்டு கும்பகோணம்மாத்தி கேட் ரயில்வே கடவு எண்.LC:270க்கு மாற்றாக புதிய ரயில்வே மேம்பாலம் அமைத்தால் போக்குவரத்து நெரிசலை தவிர்ப்பதுடன், அண்ணலக்ரஹாரம் மற்றும் புறவழிச்சாலை இணைப்பதால் வெளியூரிலிருந்து வருபவர்கள் மாநகரத்திற்கு போக்குவரத்து நெரிசலின்றி எளிதில் வந்து செல்லலாம். எனவே மாத்திகேட் பகுதியில் புதியதாக ரயில்வே மேம்பாலம் அமைக்க மாண்புமிகு ரயில்வேத்துறை அமைச்சர் மற்றும் ரயிவே போர்டு தலைவர் அவர்களையும் கேட்டுக்கொள்ளுதல். | 260<br>அனுமதிக்கப்பட்டது |
| | **பொருள் – 21**<br>**கும்பகோணம்** தென் பகுதியில் அமைய உள்ள சுற்றுச்சாலையானது (Bye pas Road) சாக்கோட்டை, கொற்கை வழியாக செல்வது அதிக தூரமும், காலதாமதமும் ஏற்படும். மேலும் உயர் மின் கோபுரம் மற்றும் விவசாயிகளின் ,விலைநிலங்களை கையகப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளால் அதிக செலவினங்களும் ஆகும். அதே இச்சாலையை தாராசுரம் வழியாக புறவழிச்சாலை இணைத்தால் தூரமும் செலவினங்களும் குறையும். கும்பகோணம் மாநகரத்தில் மகாமக திருவிழா, சுற்றுலா தலங்கள், அவசரகால மருத்துவமனைக்கு செல்லுதல் போன்ற பல சவுரியங்களால் பொதுமக்கள் பெரிதும் பயனடைவர். இச்சாலை அமைத்தல் மாநகரத்தையும், கிராம பகுதியையும் இணைத்து பொதுமக்கள் மற்றும் விவசாயிகளின் வளர்ச்சிக்கு பெரிது உதவும். எனவே இச்சாலையை சாலையானது (Bye pass road) தாராசுரம் ஒட்டி அமைத்துத் தருமாறு பணிவன்புடன் வேண்டுகிறோம். | 261<br>அனுமதிக்கப்பட்டது |
| | **பொருள் – 22**<br>தாராசுரம் எலுமிச்சங்காபாளையம் மேல தெரு மற்றும் கீழத்தெரு வழியாக கும்பகோணம் செல்லும் பாதையானது எலுமிச்சங்காபாளையம் பகுதியில் 3 வளைவுகளாலும் குறுகிய பாதையாக இருப்பதால் அடிக்கடி போக்குவரத்து இடையூறு ஏற்பட்டு பள்ளிக்கு செல்லும் மாணவர்கள் தனியார் பணியாளர்கள் அரசு ஊழியர்கள் மற்றும் வாகன ஓட்டிகள் என அனைவரும் குறித்த நேரத்திற்கு செல்ல முடியாமல் பெரும் அவதிக்கு உள்ளாகின்றனர். எனவே, இப்பாதையை எலுமிச்சங்காபாளையம் திரு.வி.க தொடக்கப்பள்ளியில் (பாக்ட்டரி) ரோடு வழியாக இருந்து எலுமிச்சங்காபாளையம் கீழத்தெருவில் முடியும் செந்தமிழ் நகர் வழியாக பாதை உள்ளது. இவற்றில் சுமார் 30 | 262<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | அடிக்கு மிகாமல் அரசுக்கு சொந்தமான பாதை உள்ளது. இவற்றை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக சாலை அமைத்து கொடுத்தால் போக்குவரத்து இடையூறு இன்றி வளைவாக செல்லும் பாதையில் ஏற்படும் சிரமங்களும் குறைந்து விரைவாக செல்ல முடியும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். | |
| | **பொருள் – 23**<br>கும்பகோணம் மாநகராட்சி தாராசுரம் பகுதிக்கு உட்பட்ட 31,32,33,34,35 வார்டுகளில் செல்லும் மாத்தி வாய்க்கால் மற்றும் லைன் கரையை பொதுப்பணி துறையிடம் இருந்து மாநகராட்சி வசம் ஒப்படைக்க வேண்டி பொதுப்பணி துறைக்கு கோருதலை தீர்மானமாக நிறைவேற்றிட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். | 263<br>அனுமதிக்கப்பட்டது |
| | **பொருள் – 24**<br>தாராசுரம் லைன் கரையானது சுமார் 30 அடி முதல் 50 அடி வரை அகலம் உள்ளது. இவற்றை சுத்தம் செய்து சாலை அமைத்தால் மாநகரப் பகுதியில் போக்குவரத்து நெரிசல் வெகுவாக குறையும். அதாவது தாராசுரம், வளையப்பேட்டை, மார்க்கெட் ரவுண்டானா, எலுமிச்சங்காபாளையம், பேட்டை தெரு, துவரங்குறிச்சி, மாத்தி, அண்ணா நகர், மகாமகம் குளம், பெண்கள் கல்லூரி வரை இச்சாலையானது செல்வதால் பொதுமக்கள் பெரிதும் பயனடைவர். | 264<br>அனுமதிக்கப்பட்டது |
| | **பொருள் – 25**<br>மாத்தி வாய்க்காலில் ஆக்கிரமிப்புகளை அகற்றி தூர்வாரினால் மழை வெள்ளங்களில் ஏற்படும் சேதங்களை குறைத்து பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் பெரிதும் பயனடைவர். | 265<br>அனுமதிக்கப்பட்டது. சிறப்பு தீர்மானங்கள் ஏற்க்கப்பட்டு மேல் நடவடிக்கைக்கு ஏற்கலாம். |

**மேயர்**
**கும்பகோணம் மாநகராட்சி**